தேனி வடக்கு மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்றுக் கொண்டார். உடன் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. உள்ளார்.

மாணவர்கள் அதிர்ச்சி

'நீட்' அனுமதிச் சீட்டுகளில் குளறுபடி - தவறுகள்!

சென்னை, மே 6 -

தேசிய அளவில் இள நிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் (NEET) நுழைவுத் தேர்வு மே 3ஆம் தேதி நடைபெற்றது. இதற்கான முன்னேற்பாடுகளில் தேசியத் தேர்வு முகமை தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள தற்காலிக அனுமதிச் சீட்டுகளில் (Admit Card) இடம்பெற்றுள்ள வினோதமான மொழிபெயர்ப்புத் தவறுகள் தமிழ்நாடு மாணவர்களிடையே பெரும் குழப்பத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் பலர் இந்தத் தேர்வைத் தமிழ் மொழியில் எழுத விண்ணப்பித்திருந்தனர். பொதுவாக ஆங்கிலம், தமிழ், ஹிந்தி உள்ளிட்ட 13 முக்கிய மொழிகளில் நீட் தேர்வு நடத்தப்படுகிறது. ஆனால், இணையதளத்தில் இருந்து அனுமதிச் சீட்டைப் பதிவிறக்கம் செய்த சில மாணவர்களுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. வினாத்தாள் மொழி என்ற இடத்தில் 'தமிழ்' என்பதற்குப் பதிலாக 'நாகர்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நீட் தேர்வு நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட 13 மொழிகளின் பட்டியலில் 'நாகர்' என்ற ஒரு மொழியே இல்லாதபோது, இத்தகைய பிழை எவ்வாறு நேர்ந்தது என்பது மாணவர்களையும் பெற்றோர்களையும் திகைக்க வைத்துள்ளது. தமிழை தேர்வு செய்த பலருக்கு நாகர் என்று இருந்துள்ளது.

மொழிப் பிரச்சினை மட்டு மன்றி, அனுமதிச் சீட்டில் உள்ள மற்ற விவரங்களும் பார்ப்பவர்களைச் அதிர்ச்சி அடைய வைக்கும் அளவிற்கு இருந்தது.

தேர்வர் பெயர்: மாணவரின் பெயர் இடம்பெற வேண்டிய 'Candidate Name' என்ற பகுதி, 'வேட்பாளர் பெயர்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேர்தல் போல வேட்பாளர் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டு உள்ளது. Candidate என்பதை மாணவர் என்று மொழி பெயர்க் காமல் வேட்பாளர் என்று மொழி பெயர்த்தது கடும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

ஆண் அல்லது பெண் (Gender) என்று குறிப் பிடப்பட வேண்டிய இடத்தில், 'திருமணம்' என்று அச்சிடப்பட்டுள்ளது. இது எந்த அடிப்படையில் மொழிபெயர்க்கப்பட்டது என்பது புரியாத புதிராக உள்ளது.

தேர்வு விவரங்கள்: 'Test Details' என்ற பகுதி, 'சோதனை விவரங்கள்' என்று நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நேரடியாக google translateல் தமிழ் மொழியே தெரியாத ஒருவர் மொழி பெயர்த்தது போல இது உள்ளது.

இந்தக் குளறுபடிகளுக்குப் பின்னால் உள்ள காரணத்தை ஆராய்ந்தபோது, இது முழுக்க முழுக்கத் தானியங்கி மொழிபெயர்ப்பு மென்பொருட்களால் (Google Translate போன்ற கருவிகள்) நேர்ந்த பிழை என்பது தெரியவந்துள்ளது.

ஆங்கிலத்தில் பதிவிறக்கம் செய்யும் போது அனைத்துத் தகவல்களும் சரியாகவே உள்ளன. இருப்பினும், தமிழ் மொழியில் தகவல்களைப் பார்க்க விரும்பும் கிராமப்புற மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு இது தேவையற்ற மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

34 ஆண்டுகளாக இயங்கி வந்த

ஸ்பிரிட் ஏர்லைன்ஸ் நிறுவன செயல்பாடுகள் நிறுத்தம்!

வெஸ்ட் பாம் பீச், மே 6-

அமெரிக்காவில் மிக குறைந்த கட்டணச் சலுகைகள் மூலம் கடந்த 34 ஆண்டுகளாக சேவையாற்றி வந்த ஸ்பிரிட் ஏர்லைன்ஸ் நிறுவனமானது மஞ்சள் நிற விமானங்களை கொண்டு தினமும் நூற்றுக் கணக்கான விமான சேவைகளை இயக்கியது. சுமார் 17ஆயிரம் பேருக்கு நிறுவனம் வேலைவாய்ப்பு வழங்கியது. இந்நிலையில் ஈரான் போரின் காரணமாக விமான எரிபொருள் விலைகள் கடுமையாக உயர்ந்ததால் இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டாவது முறையாக இந்த நிறுவனம் திவால் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

இந்த நிறுவனத்தை அரசு ஏற்று நடத்தும் திட்டம் குறித்த ஒரு இறுதி முன்மொழிவை அரசு நிறுவனத்திடம் அளித்திருந்ததாகவும் ஆனால் அது தொடர்பான ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்றும் அதிபர் டிரம்ப் கடந்த வாரம் அறிவித்து இருந்தார். இந்நிலையில் இந்த நிறுவனம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டு ள்ளது. இது குறித்து நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 34 ஆண்டுகளாக இந்த துறையில் எங்களது மிக குறைந்த கட்டண சேவை மாதிரி ஏற்படுத்திய தாக்கத்தை குறித்து நாங்கள் பெருமை கொள்கிறோம்.

வாடிக்கையாளர்கள் தாங்கள் செலுத்திய பணத்தை திரும்ப பெறுவதற்கு எதிர்பார்க்கலாம். ஆனால் வேறு விமான நிறுவனங்களில் பயண முன்பதிவு செய்வதற்கு நிறுவனத்தால் எந்த உதவியும் செய்ய இயலாது. எங்களது செயல்பாடுகளை முறையாக முடித்து க்கொள்ளும் நடவடிக்கைகளை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தொடங்கியிருக்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து விமானச் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் பல்கலையில்

மோடி பற்றிய பாடம் சேர்த்ததற்கு கண்டனம்!

வதோதரா, மே 6-

குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள எம்.எஸ். பல்கலைக்கழகம் தனது சமூகவியல் பாடத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்து, 'தேசபக்தி சமூகவியல்' என்ற தலைப்பில் புதிய பாடங்களை சேர்க்க முடிவு செய்துள்ளது. வரும் ஜூன் மாதம் முதல் அமலுக்கு வரவுள்ள இந்த பாடத்திட்டத்தில் பிரதமர் மோடியின் தலைமைத்துவ பண்புகளை விளக்கும் 'மோடி தந்து வங்கள்' மற்றும் ஆர்.எஸ். எஸ். அமைப்பின் சமூகப் பணிகள், உள்ளடக்கிய வளர்ச்சி குறித்த பாடங்கள் இடம் பெற்றுள்ளன. இது தவிர சர்தார் வல்லபாய் படேல், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மற்றும் சத்ரபதி சிவாஜி மகாராஜ் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இது பி.ஏ. சமூகவியல் 4ஆம் ஆண்டு மற்றும் எம்.ஏ. முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட உள்ளது. ஆனால் கல்வித்துறையில் அரசியல் புகுத்தப்படுவதாக காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது குறித்து காங்கிரஸ் கட்சித் தலைவர் தாரிக் அன்வர் குறிப்பிடுகையில்,

'சுதந்திரப் போராட்டத்தில் எவ்வித பங்களிப்பும் செய்யாத தியாகங்கள் புரியாத அமைப்புகளைப் பாடப்புத்தகங்களில் புகழ முற்படுவது துர திர்ஷ்ட வசமானது நாட்டில் நிலவும் கடுமையான விலைவாசி உயர்வு, வேலை வில்லாதிண்டாட்டம் மற்றும் ஊழல் போன்ற முக்கிய பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே மோடி தத்துவங்கள் போன்ற பாடங்கள் கொண்டு வரப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட அரசியல் சித்தாந்தத்தைப் பல்கலைக்கழகங்கள் மூலம் மாணவர்களிடம் திணிப்பது கல்வித்துறையின் நடுநிலைத்தன்மையைச் சீர்குலைக்கும் என்று தெரிவித்தார்.

ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த இந்திய எரிவாயு கப்பல்!

13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்!

புதுடெல்லி, மே 6-

ஹோர்முஸ் நீரிணையை இந்திய எரிவாயு கப்பல் கடந்துள்ளது.

'எம்.டி. சர்வசக்தி' என்னும் அந்த சரக்குக் கப்பல் வரும் 13 ஆம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகம் வந்தடையும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எம்.டி.சர்வ சக்தி என்ற சரக்குக் கப்பல், 46,313 மில்லியன்டன் எல்பிஜி எரிவாயு ஏற்றிக் கொண்டு ஹோர்முஸ் நீரிணையை சனிக்கிழமை கடந்தது. அந்தக் கப்பலில் 18 இந்திய மாலுமிகள் உள்பட மொத்தம் 20 மாலுமிகள் உள்ளனர்.

அந்த கப்பல் வரும் 13 ஆம் 'தேதி ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அந்த கப்பல், ஓமன் வளைகுடாவில் நின்று கொண்டிருந்தது. இக் கப்பலில் உள்ள எரிவாயு மூலம் நாட்டில் அரை நாள் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான போர் தொடங்கிய பிறகு, ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து வந்த முதல் இந்திய எரிவாயு கப்பல் 'சர்வ சக்தி' ஆகும். இந்த கப்பல் தவிர, ஹோர்முஸ் நீரிணையை கடக்க முடியாமல் கடற்பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமான 14 சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்று கொண்டிருக்கின்றன என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேலுடனான போரின் காரணமாக, கச்சா எண்ணெய், எரிவாயு கப்பல்கள் அதிகம் செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.

இதற்கு பதிலடியாக, ஈரான் துறைமுகங்களை அமெரிக்க கடற்படை கப்பல்கள் கடந்த சில நாள்களாக முற்றுகையிட்டுள்ளன.

இதனால் ஹோர்முஸ் நீரிணை வழியே கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் செல்வது பாதிக்கப்பட்டுள்ளது. இதில் இந்திய கப்பல்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழை, எளிய, நடுத்தர மக்களை பாதிக்கும்

வணிக சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

நாளை தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது!

சென்னை, மே 6-

ஏழை, எளிய, நடுத்தர மக்களை பாதிக்கும் வணிக சமையல் எரிவாயு விலை உயர்வைக் கைவிடவும், இளைஞர்களின் வாழ்க்கையை சீரழிக்கும் ரயில்வேயின் பணியிடக் குறைப்பை கைவிடவும் வலியுறுத்தி நாளை (மே 7, 2026) சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ., வி.சி.க., சி.பி.ஐ. (எம்.எல்) லிபரேசன் சார்பில் தமிழகம் முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக சி.பி.எம். மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், வி.சி.க. நிறுவனர் தொல்.திருமாவளவன், சி.பி.ஐ. (எம்.எல்) லிபரேசன் மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி ஆகியோர் மே 3 ஞாயிறன்று கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

வணிக சிலிண்டர் விலை உயர்வு!

ஒன்றிய அரசு வணிக சிலிண்டர் விலையை வரலாறு காணாத அளவிற்கு உயர்த்தியுள்ளது. கடந்த 120 நாட்களில் 1,518 ரூபாய் உயர்த்தியுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று 1,739 ரூபாயாக இருந்த ஒரு சிலிண்டரின் விலை தற்போது 3,257 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இதே போன்று புலம்பெயர் தொழிலாளர்களும், தெருவோர வியாபாரிகளும், சிறு குடும்பங்களும் கடுமையாக பாதிக்கப்படும் வகையில் அவர்கள் பயன்படுத்தும் 5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை ரூ. 261 உயர்த்தியுள்ளார்கள்.

அப்பட்டமான கொள்ளை!

இதற்கு சர்வதேச சந்தையில் எல்.பி.ஜி. விலை உயர்வு காரணமாக சொல்லப்படுகிறது. ஆனால், ஒன்றிய பாஜக அரசாங்கம் கடந்த நான்காண்டுகளாக சர்வ தேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலைகள் மூன்றில் ஒரு பகுதி குறைந்த போதும் அதன் பலனை சாதாரண மக்களுக்கு வழங்க முன்வரவில்லை. கடந்த நான்காண்டுகளாக பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு விலைகளை ஒரு போதும் குறைக்கவில்லை. இந்நிலையில் தற்போது வணிக சமையல் எரிவாயு விலையை உயர்த்தியிருப்பது அப்பட்டமான கொள்ளையாகும்.

ரயில்வே பணிகள் குறைப்பு!

மேலும், 2026 ஏப்ரல் 24ஆம் தேதியன்று வெளியிடப்பட்டுள்ள ரயில்வே துறையின் சுற்றறிக்கையின்படி ரயில்வேயில் மொத்த முள்ள பணியிடங்களில் ஆண்டுக்கு 2 சதவிகிதத்தை குறைக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் நாசகரமான இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றிணைந்து குரலெழுப்ப வேண்டுமெனவும், இந்த கண்டன இயக்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேற்கு வங்க ஃபால்டா தொகுதியில்

மே 21-ல் மறு தேர்தல் அறிவிப்பு!

கொல்கத்தா, மே 6-

மே 21 அன்று மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மறு தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில், ஃபால்டா சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மே 21 அன்று மறு தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மிகப்பெரிய அளவிலான முறைகேடுகள் நடந்ததாக பா.ஜ.க. குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்படி, மே 21 அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை மே 24 அன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை கைப்பற்றுகிறது!

திருவனந்தபுரம், மே 6-

கேரளத்தில் உள்ள 140 சட்டமன்ற தொகுதிகளுக்கும் கடந்த மாதம் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இத்தேர்தலில், பதிவான வாக்குகளின் எண்ணிக்கை நேற்று காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. சற்று முன் கிடைத்த தகவல்களின்படி, இடதுசாரி ஜனநாயக முன்னணி 40 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனநாயக முன்னணி 93 தொகுதிகளிலும் முன்னணி வகிக்கின்றன. பா.ஜ.க. கூட்டணி 3 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது.

எனவே கேரளத்தில் பத்தாண்டு இடைவெளிக்குப் பின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி மீண்டும் ஆட்சி அமைக்கிறது.

அசாம் மாநிலத்தில்

பா.ஜ.க. ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளும் நிலை!

இம்பாலா, மே 6-

அசாம் மாநிலத்தில் பா.ஜ.க. கூட்டணியில் அசாம் கன பரிஷத், ஐக்கிய மக்கள் கட்சி லிபரல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

காங்கிரஸ், அசாம் ஜாதிய பரிஷத் மற்றும் இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து கூட்டணியை அமைத்து போட்டியிடுகிறது.

126 தொகுதிகள் கொண்ட அசாம் மாநிலத்தில் ஏப்ரல் 9ம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

இத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று காலை முதல் எண்ணப்பட்டு வருகின்றன.

தற்போது வெளியாகி உள்ள தகவல்களின்படி, பா.ஜ.க. கூட்டணி 98 இடங்களிலும், காங்கிரஸ் கூட்டணி 26 தொகுதிகளிலும் முன்னணியில் உள்ளன.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராணி அண்ணா
மே 6 (1996)

பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியாரும் 'அண்ணியார்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும்; அண்ணா அவர்களின் பொதுவாழ்க்கைக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் ராணி அம்மையார் அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.